Judicial Form No.53
(see Rule 42)

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO. I, VILLUPURAM

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions

CC.26/2020

Deposition of witness for prosecution — Prosecution / Court — PW 1

Name : ஜெய்குமார்

Father Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.04.2022

**முதல் விசாரணை-**

நான் தற்போது உளுந்தூர்பேட்டையில் வசிக்கிறேன். நிவேதா டிரேடர்ஸ் என்ற பெயரில் நெல் மற்றும் பல தானிய வியாபாரம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நெல் வியாபாரம் செய்யும் ராஜீ என்பவர் மூலமாக எதிரிகளை தெரியும். 07.05.2018ம் தேதி ஆஜர் எதிரி பூபதி ராஜா விழுப்புரத்தில் உள்ள ராஜீ என்பவரை அனுகி நான் மார்டன் ரைஸ் மில் என்ற அரிசி ஆலையை வா.ஊ.சத்திரத்தில் வைத்திருப்பதாகவும் தனக்கு நெல் வேண்டும் என்றும் கேட்டுள்ளார். ராஜீ என்பவர் பூபதி ராஜாவை எனக்கு விழுப்புரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் அறிமுகம் செய்து வைத்தார். அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவருக்கு 281 அல்லது 282 நெல் மூட்டைகளை லாரியில் ஏற்றி அனுப்பினேன். அந்த லாரியின் பதிவு எண்

எனக்கு ஞாபகமில்லை. அதன் மதிப்பு ரூ.3,46,200/- ஆகும். அதில் பணம் ரூபாய் இரண்டு லட்சத்து சில்லறையை கொடுத்துவிட்டார். மீதி ஒரு லட்சத்து சில்லறையை அவரது தந்தை பட்டுராஜ் மூலமாக கொடுத்து அனுப்புவதாக கூறினார். 10.05.2018ம் தேதி பட்டுராஜ் விழுப்புரம் மார்க்கெட் கமிட்டிக்கு வந்தார். மீண்டும் நெல் தேவைப்படுவதாக கூறினார். நெல் லோடு ஏற்றுங்கள் மீதி எவ்வளவு பணம் தரவேண்டுமோ கொடுத்துவிடுகிறேன் என்றார். 282 மூட்டைகள் லாரியில் ஏற்றினேன். லாரியின் பதிவு எண் தற்போது ஞாபகமில்லை. அதன் மதிப்பு ரூபாய் மூன்று லட்சத்து சில்லறை இருக்கும். பழைய பாக்கியையும் சேர்த்து ரூபாய் 4 லட்சத்து சில்லறை வந்தது. கொடுத்த அனுப்புவதாக சொல்லிவிட்டு ஏடிஎம் இயந்திரம் மூலம் நிவேல டிரேடர்ஸ் மூலம் சிறுக சிறுக பணம் போட்டார்கள். 12.05.2018ம் தேதி 300 சில்லறை மூட்டை அனுப்பினேன். 15.05.2018 அன்று அரிசி மூட்டைகளை அனுப்பினேன். எவ்வளவு அனுப்பினேன் என்று ஞாபகமில்லை. சுமார் 200- 250 மூட்டைகளுக்கு மேல் இருக்கும். எனக்கு ஏடிஎம்-ல் கொஞ்சம் கொஞ்சமாக பணம் அனுப்பினார். 17.05.2018ம் தேதி அரிசி மூட்டைகளை அனுப்பினேன். 3 முறை அனுப்பினேன். அதன் விபரங்கள் சரியாக ஞாபகமில்லை. 7 லாரி லோடு அனுப்பினேன். அதன் மொத்த மதிப்பு ரூ. 25,76,200/- என நினைக்கிறேன். 10.05.2018 ல் இருந்து 25.05.2018 வரை சிறிது சிறிதாக ஏடிஎம் மூலம் பணம் கொடுத்தார். மீதி ரூ.10,32,929/- தர வேண்டும். போன் மூலமாக எதிரி இருவரிடம் மேற்படி தொகையை கேட்டேன். இன்று தருகிறேன். நாளை தருகிறேன். நாட்களை கடத்தி சென்றார்கள். மீண்டும் போன் செய்த போது போன் சுவிட்ச் ஆப் செய்யப்பட்டிருந்தது. அதனால் நானும், ராஜீ என்பவரும் பரிவர்த்தனைக்கு பிறகு சுமார் 30 நாட்கள் கழித்து எதிரிகள் கூறிய வ.ஊ.சத்திரம் மார்டன் ரைஸ் மில்லிர்கு சென்றோம். அங்கு சிவம் மார்டன் ரைஸ் மில் இருந்தது. சிவசுப்பிரமணி என்பவர் தான் தான் மேற்படி மில்லின் உரிமையார் என்றும், பட்டுராஜ் உரிமையாளர் இல்லை என்றும் என்னிடம் தெரிவித்தார். இதை கேட்டதும் நான் அதிர்ச்சிக்குள்ளானேன். வ.ஊ.சத்திர ஆலை சங்க தலைவர் எதிரிகள் கல்லிடைக்குறிச்சியில் இருப்பதாக தெரிவித்தார். அங்கு மதியம் சுமார் 1.00 மணிக்கு சென்று நாங்கள் பார்த்தோம். அப்போது அவர் வீட்டில் யாரும் இல்லை. சிறிது நேரம் காத்திருந்தோம் அவரது மகள் மீனா (எ) பிரம்பு மீனா இருந்தார். எங்களுக்க பணம் தரவேண்டும் என்று கூறிய போது அதற்காக தான் எதிரிகள் வெளியே

சென்றிருப்பதாகவும் மறுநாள் வருமாறும் கூறினார். மறுநாள் காலை சுமார் 11.00- 11.30 மணிக்கு அங்கு சென்று பார்த்தோம். மதியம் எதிரிகள் வந்துவிடுவார்கள் என மேற்படி மீனா கூறினார். மறுநாள் அந்த ஊரைசேர்ந்த பால்ராஜ் என்பவரை எதிரிகளின் வீட்டிற்குகு அழைத்து சென்றோம். பணம் கேட்ட போது எதிரிகள் இருவரும் பணம் கொடுக்க முடியாது. தேவிடியா பையா வெளியூரில் இருந்து இங்க வந்து என்னை கேட்கிறாயா உன்னை அடித்து இங்கியே கொலை செய்துவிடுவோம் என எதிரிகளின் வீட்டை தாண்டி பள்ளி அருகே என்னை திட்டினார்கள். நான் பின்னர் கிளம்பி வந்துவிட்டேன். மாவட்ட காவல் அலுவகத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா.ஆ-1. நீதிமன்றத்தில் நெல் வழங்கியதற்கான நிவேதா டிரேடர்ஸ் பெயரில் விற்று முதல் பில் புகைப்பட நகல் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் தனது வீட்டில் இருப்பதாக சாட்சி கூறினார். அசல் ஆவணங்களை சமர்ப்பிக்க அரசு தரப்பு காலஅவகாசம் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Villupuram